பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 19 சனிக்கிழமை 01.02.2025 | அதிர்வு 184

## கோர விபத்தில் சிக்கிய ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகளின் வாகனம்!

### நால்வர் படுகாயம்

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவுக்குச் சொந்தமான டிபென்டர் வாகனம் ஒன்று தலாவ பகுதியில் 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# மாவை தமிழருக்கு மாபெரும் சரித்திரம்

## அவரின் புகழுடலுக்கு இன்று அஞ்சலி செலுத்திய பின் சுமந்திரன் தெரிவிப்பு

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

“தேசம் என்று சொல்லுகின்றபோது மக்களும் நிலமும் முக்கியமானவை. மக்களும் நிலமும் இல்லாமல் ஒரு தேசம் கிடையாது. அந்த அடிப்படையில் மக்கள் நிலத்தில் வாழ வேண்டும் என்பதற்காக அயராது உழைத்தவர் மாவை சேனாதிராஜா. அவரின் சரித்திரம் என்பது தமிழ் மக்களின் வரலாற்றோடு சேர்ந்து பின்னிப் பிணைந்தது.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். 05



# ஹபரணையில் கோர விபத்து நால்வர் சாவு; 35 பேர் படுகாயம்

திருகோணமலை – ஹபரணை வீதியில் கல்மலை பகுதியில் பயணிகள் பஸ் ஒன்றும் ஹயஸ் வான் ஒன்றும் நேற்று நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் நால்வர் உயிரிழந்ததுடன், 35 காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து இன்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து கிண்ணியா 04

# திருமலைக் கடலில் மூழ்கி மாயமான 20 வயது இளைஞர் சடலமாக மீட்பு!




(முஹம்மட் றிஸ்னாத்)

திருகோணமலை, கடற்கரையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை குளித்துக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கிக் காணாமல்போன 20 வயதான இளைஞர் இன்று சனிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை திருகோணமலை கடற்கரையில் நண்பர்களான 4 பேர் குளித்துக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கினர். அவர்களில் மூவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். அத்தோடு ஒருவர் காணாமல்போனதையடுத்து அவரைத் தேடும் பணி திருகோணமலை கடற்படையினர் மற்றும் 04

# தமிழரசின் சிரேஷ்ட தலைவர் மாவைக்கு அஞ்சலி செலுத்திய அரசியல் பிரமுகர்கள்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் மாவை சேனாதிராஜாவின் புகழுடலுக்குக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

மாவை சேனாதிராஜாவின் இறுதிக் கிரியைகள் நாளை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.











# தமிழரசின் சிரேஷ்ட தலைவர் மாவைக்கு அஞ்சலி செலுத்திய அரசியல் பிரமுகர்கள்









# கம்பளையில் இரு கார்கள் விபத்து!

## ஒருவர் படுகாயத்துடன் வைத்தியசாலையில்



கம்பளை – நுவரெலியா பிரதான வீதியில், கம்பளை – மஹார பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இன்று பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இரண்டு கார்கள் மோதுண்டதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த நபர் ஒருவர், கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் இருந்து பழக்கடை ஒன்றும் சேதமடைந்துள்ளது. மோட்டார் யசைக்கிள் ஒன்றும் சேதமடைந்துள்ளது.

விபத்து தொடர்பில் கம்பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கோர விபத்தில்...

இன்று அதிகாலை ஒரு மணியளவில் விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டுவிட்டு கொழும்புக்குத் திரும்பும்போது இந்த விபத்துச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள்



அவர்களுடன் வந்த மற்றொரு வாகனத்தில் தலாவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் இருவரின் நிலைமை மோசமாக உள்ளதால், அவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அனுராதபுரம் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்களின் சாரதி ஜனாதிபதி செயலகத்தைச் சேர்ந்தவர் என்றும், மற்றவர்கள் இலங்கை பொலிஸில் பணிபுரியும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை காரணமாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### திருமலைக் கடலில்...

துறைமுகப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்தச் சம்பவத்தையடுத்து காப்பாற்றப்பட்ட இளைஞர்கள் மூவரும் விசாரணைக்காகத் திருகோணமலை துறைமுகப் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்நிலையில், காணாமல்போன இளைஞர் இன்று காலை சடலமாக மீட்கப்படுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் திருகோணமலை துறைமுகப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### கோர விபத்தில்...

இன்று அதிகாலை ஒரு மணியளவில் விபத்துக்குள்ளானதில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டுவிட்டு கொழும்புக்குத் திரும்பும்போது இந்த விபத்துச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.



விபத்தில் காயமடைந்தவர்கள் அவர்களுடன் வந்த மற்றொரு வாகனத்தில் தலாவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் இருவரின் நிலைமை மோசமாக உள்ளதால், அவர்கள் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அனுராதபுரம் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்களின் சாரதி ஜனாதிபதி செயலகத்தைச் சேர்ந்தவர் என்றும், மற்றவர்கள் இலங்கை பொலிஸில் பணிபுரியும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை காரணமாக விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி



**மாவை தமிழருக்கு...**

தமிழரசுக் கட்சியின் மறைந்த மூத்த தலைவர் மாவை சேனாதிராஜாவின் புகழுடலுக்கு அவரது இல்லத்தில் இன்று அஞ்சலி செலுத்திவிட்டு வெளியேறும் போதே ஊடகவியலாளர்களிடம் சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ் மக்களுடைய அரசியல் என்று வருகின்றபோது மாவை சேனாதிராஜாவின் சரித்திரம் மக்களுடைய அரசியல் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தது. எந்தவிதத்திலும் பிரிக்க முடியாதது. எங்களுடைய நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததாகச் சொல்லப்பட்ட 1948 ஆம் ஆண்டுக்குப் பிறகு என்ன விதமாக தமிழர் அரசியல் நகர்ந்து வந்தது என்பதற்கு அவருடைய வாழ்க்கையே அதனோடு இணைந்த சரித்திரமாக இருக்கின்றது.

1960 ஆம் ஆண்டுகளிலே சத்தியாக்கிரகப் போராட்டங்களுக்கு ஊடாக அவர் அரசியலுக்கு வந்தவர். அதன் பின்னர் 1970 களிலே முதலாவது புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்ட போது அதிலே தமிழ மக்கள் தேசிய வாழ்க்கையில் இருந்து வெளியே தூக்கி எறியப்பட்டார்கள். அந்தக் காலங்களில் எல்லாம் அதை முற்றாக நிராகரித்து அதற்கு எதிராகப் போராட்டம் நடத்திய இளைஞர்களில் முதன்மையானவர்களில் ஒருவராக அவர் இருந்தார்.

எனக்கு நினைவு தெரிந்த நாட்களில் இருந்து இந்த மூவர்களுடைய பெயர்கள்தான் நினைவுக்கு வரும். அதாவது காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், மாவை சேனாதிராஜா.... இந்த மூன்று பேரின் பெயர் ஒலிக்காத நாள் கிடையாது.

ஒவ்வொரு சனிக்கிழமையும் சுதந்திரன் பத்திரிகை வெளிவருகின்றபோது அவர்களுடைய பெயர்கள். அவர்கள் சிறையில் வாடிக் கொண்டிருந்தார்கள். அந்தத் தடவையில் 42 தமிழ் இளைஞர்கள் எந்தவித குற்றச்சாட்டும் இல்லாமல் வெறுமனே அரசியல் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டு இருந்தார்கள். நாங்கள் இன்றைக்கு அரசியல் கைதிகளைப் பற்றி சொல்லுகின்றோம்.

1976 ஆம் ஆண்டு அணிசேரா நாடுகளின் உச்சிமாநாடு நடக்க இருந்த வேளையில் இவர்கள் அனைவரும் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த காலத்தை மீட்டுப் பார்க்கின்றேன். சுதந்திரன் பத்திரிகையிலே 42 மெழுகுதிரிகள் எரிந்து நூர்த்துப் போகின்ற படம் சிறப்பிதழாக வெளிவந்தது. இன்னமும் ஞாபகத்தில் இருக்கின்றது.

இவர்களிலே ஐந்து பேர் தலைவர்கள். அவர்கள் இணங்கினால்தான் உண்ணாவிரதம் கைவிடப்படும் என்று தீர்மானித்த காரணத்தினாலே ஐந்து பேரையும் வெவ்வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றி விட்டார்கள். அதில் மாவை அண்ணண் மோகம்பரை சிறைச்சாலையில். அவர்கள் ஒருவருடன் ஒருவர் பேச முடியவில்லை. மற்றைய நான்கு பேரும் காலக் கிரமத்திலே உணவூட்டி ஊசி செலுத்தி அவர்களை நிமிர வைத்து விட்டார்கள். ஆனால், மாவை அண்ணண்தான் மிகக் கூடிய காலம் சிறையில் வாழ்ந்து வந்திருந்தார். அவரை இரத்தத்தால் திலகமிட்டு தமிழ் மக்கள் வரவேற்றனர்.

இவையெல்லாம் எமது தமிழ்த் தேசிய அரசியல் வாழ்க்கையிலே அடிப்படையான அத்திவாரங்களாக இருக்கும் விடயங்கள். மாவை அண்ணன் எமது தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஓர் அத்திவாரக்கல்லாக இருக்கின்றார். இன்றைய சூழலில் இருந்து பார்த்தால் அத்திவாரத்தில் ஓர் மூலக் கல்லாகக் காணலாம்.

தமிழரசுக் கட்சியின் தலைமையை அவர் எடுத்தார். அதனைப் பாதுகாத்தார். தமிழரசுக் கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியோடு இரண்டறக் கலந்திருந்த காரணத்தால் அது தேர்தலில் போட்டியிடவில்லை. புறந்தள்ளி வைக்கப்பட்டதாக இருந்தாலும்கூட கட்சியைப் பாதுகாத்து வைத்திருந்தார். அதனால் தான் 2003 ஆம் ஆண்டு ஒரு பிரச்சினை வந்தபோது அந்தவேளையிலே தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலில் முகம் கொடுக்க முடியாத சூழல் வந்தபோது கட்சிக்காக நான் வாதாடினேன். இருப்பினும் மாவை அண்ணை தமிழரசுக் கட்சியைப் பாதுகாத்து வைத்திருந்தமையால் உடனடியாகத் தமிழரசுக் கட்சியின் சினத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடக் கூடியதாக இருந்தது.

இந்தக் காலத்திலேதான் நான் அவரை நேரடியாகச் சந்திக்கும் சூழல் ஏற்பட்டது. ஏனென்றால் சட்டத்தரணி கணேசலிங்கம் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர். தன்னுடைய வீடு விடுவிக்கப்பட வேண்டும் என உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அது நிராகரிக்கப்பட்டிருந்தது. அப்போது மாவை அண்ணரும் கணேசலிங்கமும் எனது வீட்டுக்கு வந்து இப்படியாக நடந்து விட்டது, சட்ட நடவடிக்கை எடுத்து இந்த நிலங்களை மீட்க வேண்டும் எனக் கேட்டார். அதன் போது நான் கூறினேன் விடுவிக்கப்படாது விட்டாலும் குறைந்தது 100 பேராவது வழக்கு வைத்தால் ஓர் அடையாளமாக இருக்கும் எனத் தெரிவித்தேன். அதற்கு அந்த இருவரும் யாழ்ப்பாணம் வந்து மக்களைத் திரட்ட முயன்ற போது மேலும் இருவர் மட்டுமே முன்வந்தார்கள். இதில் மூவரின் பெயர்களில் வழக்குப் போட்டோம். இதில் ஒருவர் மரணமடைய இரண்டாவது வழக்காளரின் வீடு விடுவிக்கப்பட்ட நிலையில் மாவை அண்ணையின் வழக்கு மட்டுமே தொடர்ந்து சென்றது. அந்த வழக்கு நடத்தியே வலிகாமம் வடக்கில் இத்தனை ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன. தனி ஒருவனாக துணிந்து அந்தக் காலத்திலேயே தனது பெயரில் அந்த வழக்கை அவர் தாக்கல் செய்தார்.

2013 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷஇன்னொருபகுதியைச்சுவீகரிக்க முயன்றபோதும் மாவை அண்ணை என்னை அழைத்து வந்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையம் உள்ள இடத்தில் வைத்து ஒரு மக்கள் ஆர்ப்பாட்டத்தை நடத்தினார். அதன்போது 10 ஆயிரம் பேரை வழக்கு வைக்க அழைத்தோம். இருப்பினும் 2 ஆயிரத்து 176 பேர் முன்வந்தார்கள். வலிகாமம் வடக்கு சுகிர்தன் அத்தனை உறுதிகளையும் பரிசீலனை செய்து அனுப்பி வைத்தார். வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கும் நிலுவையில் உள்ளது. அதன் காரணமாகவே இந்தப் பிரதேசம் விடுவிக்கப்பட்டது.

தேசம் என்று சொல்லுகின்றபோது மக்களும் நிலமும் முக்கியமானவை. மக்களும் நிலமும் இல்லாமல் ஒரு தேசம் கிடையாது. அந்த அடிப்படையில் மக்கள் நிலத்தில் வாழ வேண்டும் என்பதற்காக அயராது உழைத்தவர் மாவை சேனாதிராஜா. அவ்வாறு கண்ணும் கருத்துமாக நின்று அவர் செயற்பட்டதன் காரணத்தினாலே இன்றைக்கு இந்த மண்ணிலே நாங்கள் நிற்கக் கூடியதாக இருக்கின்றது. அவரின் இறுதிக்கிரியைகளை இந்த இடத்தில் நடத்தக் கூடியதாக உள்ளது.

இன்று நான் வரும்போது மக்கள் வீடுகள் கட்டி வாழ்வதைப் பார்த்தேன். இந்த வலிகாமம் வடக்கு மக்கள் சந்தோசமாக வாழ அடிகோலியாக இருந்தவர் அண்ணண் மாவை. இப்படியாகப் பல விடயங்களைச் சொல்லலாம். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியத்தின் ஓர் அடையாளமாக – அதனுடைய அத்திவாரமாகப் பயணித்தவர் அண்ணண் மாவை. இன்றைக்கு அவர் மரணித்திருக்கின்றார். மாவை அண்ணணின் சரித்திரம் என்பது தமிழ் மக்களின் வரலாற்றோடு சேர்ந்து பின்னிப் பிணைந்தது.” – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# டிரம்பின் சண்டப் பிரசண்டம்

கடந்த நூற்றாண்டின் பிற்பாதியில் தனது ஆயுத பலத்தை முன்னிறுத்தி, உலகின் தலைமை நாடாகத் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள அமெரிக்கா எடுத்த முயற்சி இப்போது தள்ளாடுகின்றது.

முதன் முதலில் அணு ஆயுதத்தைத் தயாரித்த அமெரிக்காவின் வழியில் இன்று உலகின் பல நாடுகள் அந்தப் பலத்தோடு அமெரிக்காவுக்குச் சவாலாக நிமிர்ந்து நிற்கின்றன.

ஆயுத ரீதியிலும், இராணுவ வலிமையிலும் அமெரிக்காவுக்கு சவால் விடக்கூடிய நிலையில் பல நாடுகள் மேலெழுந்து வருகின்றன.

இந்தப் பின்புலத்தில் உலகின் தலைமை நாடாக - சர்வதேச பொலிஸ்காரனாக - தன்னை நிலை நிறுத்துவதற்கு அமெரிக்கா ஆயுத வழிக்குப் புறம்பான விடயங்களை நாட வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டு இருக்கின்றது.

ஆனாலும் தொழில் நுட்பம் போன்ற பிற விடயங்களில் அமெரிக்காவுக்கு சவால் விடும் அளவில் போட்டிக்கு பல நாடுகள் வளர்ந்து வருவது அமெரிக்காவுக்கு இது விடயத்தில் சிக்கலாக உள்ளது.

இந்தப் பின்புலத்தில் அமெரிக்கா சர்வதேச பொருளாதாரத்தை தனது கக்கத்தில் - பிடிக்குள் - வைத்துக் கொண்டு அதன் மூலம் உலக நாடுகளை அடக்கித் தன்னுடைய மேலாதிக்கத்தை நிலை நிறுத்த பகீரதப் பிரயத்தனம் செய்கின்றது என்பது இப்போது வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியுள்ளது.

அதுவும் டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அமெரிக்க அதிபராகப் பதவியேற்றமையை அடுத்து பொருளாதார துரும்புச் சீட்டைப் பயன்படுத்தும் அவரது எத்தனம் வெளிப்படுகின்றது. அது சாத்தியமானதா என்பதை காலம் தான் கூற வேண்டும்.

இந்தப் போக்கின் ஒரு கட்டமாக சர்வதேச வர்த்தகத்துக்கு அமெரிக்க டொலருக்கு மாற்றாக வேறு ஒரு புதிய கரன்ஸியை உருவாக்கினால் அமெரிக்காவின் நூறு சதவீத வரி விதிப்பை எதிர்கொள்ள வேண்டிய இருக்குமென்று பிரிக்ஸ் நாடுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

''அதாவது பிரிக்ஸ் நாடுகள் புதிய பிரிக்ஸ் கரன்ஸியை உருவாக்கக் கூடாது அல்லது டொலருக்கு நிகராக மற்றொரு கரன்ஸியைத் தேடக் கூடாது. இல்லையென்றால் 100 சதவீத வரிவிதிப்பைச் சந்திக்க நேரிடும் அல்லது மகத்தான அமெரிக்க பொருளாதாரத்தில் வியாபாரம் செய்யும் எதிர்பார்ப்பைக் கைவிட வேண்டும் என்பதே அது.'' என்று அவர் விளக்கம் கூறியுள்ளார்.

பிரிக்ஸ் கூட்டமைப்பில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆபிரிக்கா, எகிப்து, எதியோப்பியா, ஈரான், இந்தோனேசியா மற்றும் ஐக்கிய அரபு அமிரகம் ஆகிய வலிமையான பொருளாதார நாடுகள் உள்ளன. இந்தக் குழுவுக்கென தனியாக பொதுப்பணம் இல்லை. உக்ரைன் போருக்கு பின்பு, ரஷ்யா மீது மேற்குலக நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ள நிலையில் பொதுப் பணத்துக்கான பேச்சுக்கள் எழுந்துள்ளன.

இந்தப் பின்னணியில்தான் பிரிக்ஸ் நாடுகளுடனும் பொருளாதார யுத்த முனையைத் திறக்கின்றார் டிரம்ப்.

"பிரிக்ஸ் நாடுகள் அமெரிக்க டாலரை விட்டு விலகிச்செல்ல முயற்சிக்கின்றன. நாங்கள் அதை ஒதுங்கி நின்று பார்த்துக் கொண்டிருக்கும் காலம் முடிந்துவிட்டது. எதிரிகளைப் போலத் தோன்றும் அந்த நாடுகளுடன் நாங்கள் ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ளவிருக்கிறோம்.'' - என்று அவர் அச்சுறுத்தல் பாணியில் கூறுகின்றார்.

தனது நெருங்கிய அயல் மற்றும் நட்பு நாடான கனடா மற்றும் மெக்சிகோவுக்கு இன்றைய திகதி முதல் 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

அமெரிக்காவுக்கு தீங்குவிளைவிக்கும் - அச்சுறுத்தலாய் இருக்கும் - போதைப் பொருள் விநியோகத்தில் சீனாவின் பங்கு இருப்பதாய்க் கூறி அந்நாட்டின் இறக்குமதிப் பொருள்களுக்கு 10 சதவீதம் வரி விதிக்கப்போவதாக ட்ரம்ப் நிர்வாகம் அச்சுறுத்தல் விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க நிர்வாகத்தின் இத்தகைய மேலாதிக்க சண்டப்பிரசண்டம் பலன் தருமா அல்லது படுகுழியில் தள்ளுமா என்பது போகப் போக தெளிவாகும்.

# நீதிபதி இளஞ்செழியனின் சேவை நலன் பாராட்டு விழா

(கி.வசந்தன்)

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் மா.இளஞ்செழியனின் சேவை நலன் பாராட்டு விழா இன்று நடைபெற்றது.

வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையில் வவுனியா – ஈரப்பெரியகும் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

முன்னதாக ஏ – 9 பிரதான வீதியில் இருந்து மங்கள வாத்தியங்கள் முழங்க மாலை அணிவித்து நீதிபதி மா.இளஞ்செழியன் வரவேற்கப்பட்டதுடன், அவரது 27 வருட நீதித்துறை சேவையைப் பாராட்டிய வடக்கு – கிழக்கு பகுதிகளில் இருந்து வருகை தந்த மேல் நீதிமன்ற, மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் வடக்கு – கிழக்கைச் சேர்ந்த சட்டத்தரணிகள் ஆகியோர் கௌரவிப்புக்களையும் வழங்கினர்.

நீதித்துறையில் 27 வருடத்தைப் பூர்த்தி செய்த முதல் தமிழ் நீதிபதியாக கடமையாற்றிய மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்க வேண்டிய நிலையில் அரசின் இழுத்தடிப்புகளாலும், காலதாமங்களாலும் அவர் ஓய்வு நிலைக்குச் செல்கின்றார். இருப்பினும் அந்தப் பதவி நீதிபதி மா.இளஞ்செழியனுக்கு வழங்கப்பட வேண்டும் எனப் பலரும் இதன்போது கருத்துத் தெரிவித்தனர்.



















# மாவிட்டபுரத்தில் சிவபூமி திருக்குறள் வளாகம் நாளை ஞாயிற்றுக்கிழமை திறப்பு விழா நிகழ்வு





யாழ்ப்பாணம், கீரிமலை வீதி, மாவிட்டபுரத்தில் சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தால் புதிதாக நிர்மாணிக்கப் பட்ட சிவபூமி திருக்குறள் வளாகத் திறப்பு விழா நாளை (02) ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுகன் தலைமையில் நடைபெற வுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்திய உச்ச நீதிமன்ற நீதியரசர் ரா.மகாதேவன் கலந்து கொள்ள வுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பா ணம் இந்திய துணைத் தூதுவர் சாய்முரளி, சிரேஷ்ட சட்டத்தரணி கலா நிதி குமாரவடிவேல் குருபரன், அண் ணாமலை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமுறைக் கலாநிதி குமார வயலூர் பாலச்சந்தர் ஓதுவார் ஆகியோர் கலந்து கொள்வர்.

வரவேற்புரையை சிவபூமி அறக் கட்டளை நிறுவன இணைச் செயலாளர் மகேசன் தயாகரன் வழங்குவார்.

ஆசியுரைகளை மாவை ஆதீன முதல்வர் மகாராஜஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கோப்பாய் சுப்பிரமணிய கோட்ட முதல்வர் தொண்டு நாதன் சுவாமிகள் அகியோர் நிகழ்த்துவர்.

வாழ்த்துரைகளை யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேரா சிரியர் சி.சிறிசற்குணராசா, கிழக்கி லங்கை பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம், வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் அ.அற்புதராசா, யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், தெல்லிப்பளை வலி வடக்கு பிரதேச செயலாளர் திருமதி சிவசங்கர் சுதீஸ்னர் ஆகியோர் நிகழ்த் துவர்.

சிவபூமி அறக்கட்டளையின் வெள்ளி விழா நிறைவை முன்னிட்டு வெளியிடப் படும் சிவபூமி சிறப்புமலரை அதன் ஆசிரியர் பொறியியலாளர் ச.சந்தோஸ் வெளியிட்டு வைப்பார். திருக்குறள் உரைநூலை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அறிமுகம் செய்து வைப்பார்.

நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக சிவபூமி திருக்குறள் வளாகம் அமைப் பதற்கு உதவிபுரிந்த அன்பர்களான ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் சொ. கமலாகரன் தம்பதிகள், அமெரிக்காவைச் சேர்ந்த வைத்திய நிபுணர் க கேதீஸ்வரன் தம்பதிகள் சொ கமலாகரன் தம்பதிகள்கேதீஸ்வரன் தம்பதிகள் லண்டன் கணக்காளர் க. பூபாலசிங்கம் தம்பதிகள், லண்டன் தொழிலதிபர் வி.யோகநாதன் தம்பதி கள், கொழும்பைச் சேர்ந்த செல்வி சியாமிளா புஸ்பநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.ஷ

சிவபூமி அறக்கட்டளை இணைச் செயலாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் நன்றி யுரையாற்றுவார்.

சிவபூமி திருக்குறள் வளாக சிறப்பு விழாவின் மாலை நிகழ்வுகள் பிற்பகல் 3 மணிக்கு சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழக திருமுறைக் கலாநிதி குமாரவயலூர் பாலச்சந்தர் ஓதுவாரின் திருமுறை, திருக்குறள், கடவுள் வாழ்த்துகளுடன் ஆரம்பமாகும். வர வேற்புரையை சிவபூமி அறக்கட்ட ளையின் உபதலைவர் வைத்திய நிபுணர் நிபுணர் த.பேரானந்தராஜா வழங்குவார்.

நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுவார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்ப் பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் நா.சண்முகலிங்கன், யாழ் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன், முல்லைத்தீவு அரச அதிபர் அருளானந்தம், உமா மகேஸ்வரன் கிளிநொச்சி அரச அதிபர் சுப்ரமணியம் முரளீதரன், மன்னார் அரச அதிபர் கனக சபாபதிகனகேஸ் வரன், யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி சிவசுப்பிரமணியம் ரகுராம், யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கிருஸ்ணப் பிள்ளை விசாகரூபன் ஆகியோர் கலந்து கொள்வர்.

தொடர்ந்து "திருக்குறளின் மேன்மை பெரிதும் வெளிப்படுவது" என்ற தலைப் பிலான பட்டிமன்றத்துக்கு யாழ். பல் கலைக்கழக உயர் பட்டப்படிப்பு பீடாதிபதி பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி நடுவராகப் பணியாற்றுவார்.

இந்தப் பட்டிமன்றத்தில் அறத்திலே என்னும் தலைப்பில் நல்லையா விஜய சுந்தரம், குமரேசன் பாலஷண்முகன் சண்முகானந்தன் சந்தோஷன் ஆகி யோரும் இன்பத்திலே என்னும் தலைப் பில் வேலாயுதம் சிவராஜா, இரத்தின சிங்கம் சர்வேஸ்வரா, தெய்வேந்திரம் ஹர்சன் ஆகியோரும் பொருளிலே என்னும் தலைப்பில் சந்திரமௌசிகன் லலீசன், நடராஜா ஜங்கரன், ஜீவரட்ண ராஜா ஜீவன் ஆகியோரும் வாதிடு வார்கள்.

வள்ளுவன் தன்னை உலகக்கே தந்து என்னும் தலைப்பிலான கவி அரங்குக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா தலைமை தாங்குவார். இந்தக் கவி அரங்கில் பா.மகாலிங்க சிவம், பேராசிரியர். ச.முகுந்தன், வேலணையூர் சுரேஸ்,இ.த.ஜெயசீலன், நா.சிவசிதம்பரம் ஆகியோர் கவி மழை பொழியவுள்ளனர்.



# மாவை! எப்படித் தாங்குவோம் உன் சாவை!

## கவிஞர் காசி ஆனந்தன் இரங்கல் அஞ்சலி

மாவை சேனாதியின் சாவைத் தாங்க முடியவில்லை. அறப்போராட்டக் காலத்தில் அவரோடு இணைந்து தமிழீழ விடுதலைக் களத்தில் நின்ற அந்த நாள்களில் தோய்கின்றேன். அழியா நினைவுகள் அவிழ்கின்றன.

இவ்வாறு கவிஞர் காசி ஆனந்தன் வெளியிட்டுள்ள இரங்கல் அஞ்சலியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொடிய சிங்களக் கொலைக் குற்றவாளிகளின் சிறைக் கூடங்களான வெலிக்கடை, போகாம்பறை ஆகிய சிறைச்சாலைகளில் அவரோடு நெடிய ஐந்து ஆண்டுகள் கொந்தளிக்கும் நெஞ்சோடு சிறையுண்டு கிடந்த காலத்தின் நினைவு.

சிங்களப் படை வெறியர்களின் படைத்தளமான வெலிசறை கைமுனு படை முகாமில் சிறகுடைந்த பறவையாக அவரோடு சிறை வாழ்வு கண்ட காலத்தின் நினைவு.

இலங்கை விடுதலை பெற்றதாகச் சொல்லப்படும் நாளைப் புறக்கணிக்க வேண்டி எங்களோடு இணைந்து மட்டக்களப்பில் துண்டறிக்கைகளை மக்களிடையே வழங்கிக் கொண்டிருந்த போது, தளைப்படுத்தப்பட்டு, அதே நாளில் மட்டக்களப்புக் கல்லூரி ஒன்றில் வெடி குண்டு வீசப்பட்ட நிகழ்வோடு தொடர்பு படுத்தப்பட்டவர்களாய் கண்டி போகாம்பறை சிறைச்சாலையில் தள்ளப்பட்டு – தமிழர் தலைவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் மாபெரும் வழக்கறிஞர் சிவசிதம்பரம் அவர்களின் சட்டப் பேராற்றலால் விடுதலையான பழைய நினைவு.

கியூபாவில் நடைபெற்ற உலக நாடுகளின் இளைஞர் விழாவில் அவரோடு இணைந்து, கலந்து ஈழத் தமிழர்களின் அடிமை வாழ்வை உலகின் பல நாடுகளில் இருந்து கலந்து கொண்ட



பேராளர்களிடம் பரப்பிய நினைவு.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அறப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறிக் கொண்டிருந்த காலக்கட்டத்தில்– முதன்முதலாகத் தளைப்படுத்தப்பட்டு நான் வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்ட ஓரிரு வாரங்கள் இடைவெளியில் என்னோடு சிறைச்சாலையில் தள்ளப்பட்ட முத்துக் குமாரசாமி (குமார்), வண்ணை ஆனந்தன், பூபதி, குட்டி மணி ஆகியோரை உள்ளடக்கிய 42 இளைஞர்களில் ஒருவராய் அவர் என்னைச் சந்தித்த முதல் நாளின் உணர்ச்சி மயமான நினைவு.

சிங்கள இனவெறிக் காவலர்களும் கொலைவெறிச் சிறையாளிகளும் அச்சமூட்டிய நிலையில் கொடிய சிங்களச் சிறைச் சாலைகளில் நாங்கள் சாகும் வரை உண்ணா நோன்பை மேற்கொண்ட போது எங்களில் ஒருவராய் அந்த உண்ணா நோன்பில் அவரும் கலந்து கொண்ட நெஞ்சைச் சிலிர்க்க வைக்கும் நினைவு.

இமை மூடி மாவை சேனாதி நிலையான தூக்கத்தில் இருக்கும் இவ்வேளையில் பழைய நினைவுகளில் என்னை இழந்தவனாய் நிற்கிறேன்.

ஆயுதப் போராட்டம் தொடங்கிய காலத்தில் மாவை தொடர்ந்தும் தேசிய நீரோட்டத்தில் இருப்பதென்றும் – நாடாளுமன்ற அரசியலைத் தொடர்வதென்றும் முடிவு செய்தார். நான் தலைவர் பிரபாகரன் அவர்கள் மூட்டிய நெருப்பில் நிற்பதென்று முடிவு செய்தேன்.

இருப்பினும், தமிழீழ விடுதலைக் கொள்கையை விட்டுக்கொடுக்காத வராகவே அவர் தன் இறுதி மூச்சுவரை வாழ்ந்தார்.

எந்தக் காலத்திலும் மாவை சிங்கள இனவெறி அரசின் கைக்கூலியாக இருந்தார் என்று எவனும் பழி சுமத்த முடியாது.

அவர் தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்த பத்து ஆண்டுகள் காலத்தில் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் மந்திரி பதவியை ஏற்றதில்லை என்பது அவர் தமிழரசு மரபைப் பேணினார் என்பதை அடித்துப் பேசும்.

எனக்கும் அவருக்கும் இடையில் கருத்து வேறுபாடு எழுவதுண்டு.

ஆனால், கொள்கை வேறுபாடு இல்லை என்பதால் கருத்து வேறுபாடு பெரிய அளவில் நிலை கொள்ள வில்லை. என் பொதுவாழ்வில் நீண்ட நெடுங்காலம் என்னோடு உறவு கொண்டிருந்த அவர் திருவடிகளில் என் கண்ணீரை வைக்கின்றேன்.

துயரம் தோய்ந்த இவ்வேளையில் அதிக துயரம் தரும் ஒரு நிகழ்வு நிகழ இருப்பதாய் வரும் செய்திகள் அறிந்து துவண்டு துடிதுடித்து நிற்கிறது மனம்.

முள்ளிவாய்க்காலில் ஒன்றரை லட்சம் தமிழர்களைக் கொன்று குவித்த சிங்கள இனவெறி அரசுத் தலைவர்கள் மாவைக்கு இறுதி அஞ்சலி செலுத்த வருவதாக அறிகிறேன். முகம் கொடுத்து அவர்களை வரவேற்காதீர்கள்.

தமிழனைச் சாகடித்தவனுக்குத் தமிழனின் சாவில் அஞ்சலி செலுத்தும் தகுதி இல்லை.– என்றுள்ளது.

# தமிழர்களின் உரிமைகளுக்காக அரசியலில் பயணித்தவர் மாவை!

## சமத்துவக் கட்சி இரங்கல் தெரிவிப்பு

தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான கோசத்தோடு பயணித்த மூத்த அரசியல் தலைவர் மாவை சோனாதிராஜா.

இவ்வாறு சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் வெளியிட்டுள்ள அஞ்சலி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இவர் 1970 களில் இருந்து தமிழரின் உரிமைக்கான அரசியல் கோசத்தோடு பயணித்தவர். இதற்காக, ஆரம்ப காலத்தில் நீண்ட சிறைவாழ்க்கையை அனுபவித்தவர். பின்னாளில் நாடாளுமன்ற அரசியலில் ஈடுபட்டு, அந்த அரசியலைத் தொடர்ந்தவர்.

அவருடைய அரசியற் காலமானது நெருக்கடிகளும் ஏற்ற இறக்கமும் கொண்டதாக இருந்தது. ஆயினும் அவற்றுககு எல்லாம் முகம் கொடுத்து நின்று, தன்னை நிலைப்படுத்திக் கொண்டார். அவர் விரும்பிய, முன்னெடுத்த அரசியல் வெற்றி பெறவில்லை என்றாலும் அந்த அரசியல் பயணத்தில் மாவை சேனாதிராஜா என்ற பாத்திரத்தின் பங்களிப்பு வரலாற்று அடையாளமாக என்றுமிருக்கும்.

அந்த வகையில் மூத்த அரசியற் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு சமத்துவக்கட்சி தனது அஞ்சலியை செலுத்தி நிற்கிறது.– என்றுள்ளது.

# மறைந்த மாவை சேனாதிராஜாவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஞ்சலி

## நூல் வெளியீட்டு நிகழ்வில் மௌனம் அனுஷ்டிப்பு

மறைந்த தமிழரசு கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவராக, எங்களோடு சக நாடாளுமன்ற உறுப்பினராக நீண்ட காலம் பணியாற்றிய நண்பர் மாவை சேனாதிராஜாவுக்கு என்னுடைய அஞ்சலியை செலுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அஞ்சலி தெரிவித்துள்ளார்.

வியாழக்கிழமை (30) கொழும்பு-7, இல் நடைபெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்திருந்த , "உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் - மறைகரம் வெளிப்பட்டபோது" மற்றும் "நாங்கள் வேறானவர்கள் அல்ல மண்ணின் வேரானவர்கள் -முஸ்லிம்கள் மீது கட்டமைக்கப்பட்ட சந்தேகங்களை களைதல்" ஆகிய இரு மொழிபெயர்ப்பு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு இடம் பெற்றது.

இதில் ஏற்புரையின் ஆரம்பத்தில், மறைந்த தமிழரசு கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான மாவை சேனாதிராஜாவுக்கு அஞ்சலி செலுத்து வதாகக் குறிப்பிட்டார்.

பிரஸ்தாப நிகழ்வின் தொடக்கத்தி லேயே இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த அனைவரும் எழுந்து நின்று, அன்னாருக்கு இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலியும் செலுத்தி னர்.

இந்த நிகழ்வில் அவர் சேனாதி ராஜாவைப்பற்றி மேலும் கூறியதாவது,

தமிழரசு கட்சியின் பல சாத்வீக போராட்டங்களில் ஒரு இளைஞரணித் தலைவராக தந்தை செல்வா, அண்ணன் அமிர்தலிங்கம், அண்ணன் சிவா, அண்ணன் சம்பந்தன் என்று தலைமைத்துவங்கள் மாறி மாறி வந்தபோதிலும்கூட தமிழரசு கட்சியின் வீரியமிக்க ஒரு இளைஞராக இருந்து முதுமை அடைந்த காலத்திலும் கூட, அதே வீரியத்துடன் தமிழினத்துக்காக பேசியவர் மாவை.

தொடர்ந்தும் தன்னுடைய முழு வாழ்க்கையையும் தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்தவர். கொழும்பு, புளர்ஸ் வீதி படுகொலைகளின் போது தெய் வாதீனமாக உயிர்தப்பி, பல காலம் சிறைவாசம் அனுபவித்த ஒரு நல்ல அர்பணிப்புமிக்க தலைவரை நாங்கள் இழந்திருக்கிறோம்.

அவருக்கான அஞ்சலியை நான் இந்த மேடையில் செய்கின்றதன் காரணம், துரதிர்ஷ்டவசமாக அவருடைய இறுதி கிரியை நடககும் ஞாயிற்றுக் கிழமை நான் இலங்கையில் இருக்க ம ாட்டேன்.- என்றார்.

# தமிழ் பேசும் மக்களுக்கான அரசியலில் நிரப்ப முடியாத வெற்றிடம் மாவை ஐயா!

## யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் இரங்கல்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட பெருந்தலைவரும் முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ. சேனாதிராஜாவின் இழப்பானது தமிழ்த் தேசிய அரசியலிலும், தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் பயணத்திலும் என்றும் நிரப்ப முடியாத வெற்றிடமாகும்.

அன்னாரின் மறைவுக்கு யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் சார்பில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் 13 ஆம் வட்டார மூலக் கிளை செயலாளர் என்.எம். அப்துல்லாஹ் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அந்த இரங்கலில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைகளைக் கண்டித்து, போராடி சிறைவாசமும் அனுபவித்தவர் மாவை சேனாதிராஜா. அன்னாரின் இழப்பு தமிழ் பேசும் மக்களின் அரசியல் பரப்புக்கு பேரிழப்பாகும். முஸ்லிம் மக்களுக்கும் மாவை சேனாதிராஜா ஐயா அவர்களுக்குமான தொடர்பு மிக நெருங்கியதாகவே ஆரம்பம் முதல் இறுதிவரை காணப்பட்டது. அவர்களின் நீண்டகால அரசியல் தீர்வு குறித்த பயணத்தில் குறிப்பாக வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்களையும் அரவணைத்தே அவரது செயற்பாடுகள் அமையப்பெற்றிருந்தன.

குறிப்பாக வடக்கில் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறிவரும் முஸ்லிம் மக்களின் தேவைகள் மற்றும் மீள்குடியேற்றம் சார்ந்த விவகாரங்களில் அவர் நாடாளுமன்ற உறுப்பினராகவும், யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவராகவும் செயற்பட்ட காலத்தில் பல்வேறு வழிகளிலும் தன்னால் முடிந்த பங்களிப்புக்களை தான் வகித்த பதவி வழியாகவும் கட்சி வாயிலாகவும் வழங்கிய பெருந்தலைவர் ஆவார்.

அந்த வகையில் அவரது நாடாளுமன்றப் பதவிக் காலப் பகுதியிலும் பல்வேறு நிதி ஒதுக்கீடுகளை யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் வாழும் முஸ்லிம் வட்டாரங்களான 10 ஆம் மற்றும் 13 ஆம் வட்டாரங்களுக்கு ஒதுக்கியிருக்கின்றார். பல மில்லியன் கணக்கிலான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. இது அவரது அனைத்து மக்களையும் அரவணைத்துச் செல்லும் குணத்தைக் கொண்ட உன்னத தலைவர் என்பதை காட்டி நிற்கின்றது.

வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த அடையாளமாக விளங்கிய பழைமை வாய்ந்த தமிழ்த் தேசியக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வாவின் காலப் பகுதியில் இருந்து கட்சியில் உறுப்பினராக செயற்பட்டு நீண்டகாலமாக கட்சியின் பெருந்தலைவராக கட்சியையும், வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்களையும் தலைமை தாங்கி வழிநடத்தி வந்தவரின் இழப்பு பேரிழப்பாகும்.

அவர் வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களை என்றுமே பிரித்துப் பார்த்தது கிடையாது. அவரது ஒவ்வொரு உரைகளும் முஸ்லிம் மக்களையும் இணைத்ததாக தமிழ் பேசும் மக்கள் என்றே என்றும் அமைந்திருக்கும். 1990 ஆம் ஆண்டு வெளியேற்றத்துக்கு முன்னர் முஸ்லிம் மக்களுடன் அவருக்கும், கட்சிக்கும் இருந்த பிணைப்பானது வெளியேற்றகால இடைவெளியின் பின்பு குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைக் காலத்திருந்து மீண்டும் இன்னும் மிக நெருங்கியதாக அவருக்கும், கட்சிக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் கட்டியெழுப்பப் பட்டிருந்தது.

அந்த நெருக்கமும், தொடர்பும் இன்றுவரை காணப்படுகின்றது. இவ்வாறான தலைவர்களின் மென்போக்குகளே இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் - யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களுக்கும் இடையிலான பிணைப்பை இன்றுவரை தொடர்ச்சியாக முன்னோக்கி கொண்டு செல்கின்றது.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்துக்கும், உறவுகளுக்கும், மக்களுக்கும் குறிப்பாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தொண்டர்களுக்கும் யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.- என்று தெரிவித்துள்ளார்.

# போதை என்பதைப் பொசுக்கியே நிற்போம் !




பணத்தில் போதை பதவியில் போதை
பட்டத்தில் போதை பார்ப்பதிலும் போதை
இப்போதை எல்லோர்க்கும் இருக்கின்ற போதை
இதனைவிட ஆபத்தே இளைஞரிடம் போதை

படிக்கின்ற பலரையும் பற்றியதே போதை
குடிக்கின்ற புகைக்கின்ற சுவைக்கின்ற வகையில்
மாத்திரையாய் வகைவகையாய் வண்ணமுறு வகையில்
போதைதரும் பொருள்கள் வீதி வருகிறதே

கண்டதை உடைப்பார் கைக்குண்டு வீசுவார்
கண்ணெதிரே வருவாரைக் கத்தியால் குத்துவார்
கடையும் உடைப்பார் பொருளும் எடுப்பார்
அத்தனையும் போயை அரங்கேற்றி நிற்கும்

வீதியில் கிடப்பார் வீட்டினை நாடார்
போதையில் கிடந்து பொழுதினை இழப்பார்
யாரையும் அடிப்பார் காரையும் உடைப்பார்
வேரிலா மரமாய் வீழ்ந்துமே கிடப்பார்

நாகரிக மோகம் என்றுமே சொல்லி
நாளுமே போதைக்குள் புகுந்து விடுகின்றார்
ஆர்தடுத்தும் கேளார் அறிவுரையும் ஏற்கார்
அழிவதை அறியா அணைத்து மகிழ்கின்றார்

போதையிலே ஆழ்வார் பொழுதெல்லாம் இருளே
பாதை தடுமாறி படுகுழியில் வீழ்வார்
வந்தநல் வாழ்வை மடியும்படி செய்வார்
மனமுழுக்க மயக்கம் கொண்டுமே கிடப்பார்

சிந்தனைகள் சிதறும் சீரழிவு பெருகும்
சந்ததும் யாவும் சஞ்சலமாய் தெரியும்
சொந்தமெலாம் தெரியா தூரவே நிற்பார்
அந்தரத்தில் மிதந்து அதுவுலகு என்பார்

பெற்றவர்கள் அழுவார் உற்றவர்கள் அழுவார்
போதையிலே பேதலித்து நிற்பவர்கள் சிரிப்பார்
கற்றதெல்லாம் போகும் கண்ணியமும் கழரும்
நற்றவத்து வாழ்வு நஞ்ஞாகிப் போகும்

உலகனைத்தும் இப்போ பெருகிவரும் போதை
உலகமைதி குலைக்க வந்தபெரும் வினையே
நலமுடைய வாழ்வை நாசமாக்கும் போதை
நாநிலத்தில் ஒழிந்தால் நல்வாழ்வு மலரும்

போதை அகற்றுவோம் புத்தி புகட்டுவோம்
பாதை காட்டுவோம் பக்குவம் உணர்த்துவோம்
போதை என்பதைப் பொசுக்கியே நிற்போம்
பாதை ஒளிர்ந்திடும் பலதும் தெரிந்திடும்!



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
மேனாள் தமிழ் மொழிக் கல்வி
இயக்குநர்,
மெல்பேர்ன், ஆஸ்திரேலியா.



# ஆட்சி மாற்ற நிலையை அடுத்து பாடப் பதிவு புத்தகத்திலும் மாற்றம்


(வவுனியா நிருபர்)

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்ததை அடுத்து பாடசாலையில் நடைமுறையில் இருந்த பாடப் பதிவு புத்தகத்திலும் பல புதிய விடயங்களுடன் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதுவரை காலமும் நீல நிறத்தில் காணப்பட்ட பாடப் பதிவு புத்தகம் குறித்த வலயக் கல்வி திணைக்களங்களால் அச்சகங்களில் அச்சிடப்பட்டு பாடசாலைகளிடம் பணம் அறவிட்டு வழங்கப்பட்டு வந்தன.

ஆனால், தற்போதைய புதிய அரசின் திட்டத்துக்கு அமைய நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளுக்குமான 2025 ஆம் ஆண்டுக்கான பாடப் புதிவு புத்தகங்கள் அனைத்தும் ஒரு இடத்தில் அச்சிடப்பட்டு குறித்த பாடப் பதிவு புத்தகத்தில் மேலும் பல புதிய விடயங்களை உள்ளடக்கி சிவப்பு மற்றும் கறுப்பு வர்ணம் கொண்டதாக வலயக்கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு வகுப்புக்களுக்குமான பாடப் பதிவு புத்தகத்தில் மாணவர் மற்றும் அவர்களது பெற்றோர் தொடர்பான முழுமையான விவரம், மாணவர்கள் பாடசாலை நேரத்தில்




வெளிச் செல்லும் விவரம், ஆசிரியரின் உள்ளக மதிப்பீடு விவரம், ஆசிரியர்களின் மேலதிக கற்பித்தல் செயற்பாட்டு விவரம், தவணை அலகுகள் நிறைவு செய்த விவரம் என பல விடயங்களை உள்ளடக்கியதாக குறித்த பாடப் பதிவு புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# வவுனியா முன்பள்ளி ஆசிரியர்களுக்கு முன்பள்ளி விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கல்வி அபிவிருத்தி குழுமத்தின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முன்பள்ளி தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நிகழ்வொன்று இன்று (01) வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட மேலதில அரச அதிபர் தி.திரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற கருத்தரங்கு நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். அத்துடன் கல்வி அபிவிருத்தி குழுமத்தின் பிரதிநிதிகள், வவுனியா தெற்கு உதவிக் கல்விப் பணிப்பாளர், வவுனியா வடக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், முன்பள்ளி இணைப்பாளர்கள் உள்ளிட்ட வவுனியா மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# காந்தியூர் கண்ணகை அம்மன் ஆலயத்தில் அலங்கார உற்சவம்

புலோலி காந்தியூர் கண்ணகை அம்மன் கோவில் அலங்கார உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி நடைபெற்ற வருகிறது.

எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு 1008 சங்காபிஷேகம் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு விசேட பூஜை இடம் பெறுவதுடன் அலங்கார உற்சவம் நிறைவுபெறும்.

கோவில் குருக்கள் சிவஸ்ரீ ச. சாந்தன் ஐயா உதவியுடன் சிவஸ்ரீ இராசையா மண்டலேஸ்வரக் குருக்கள் பிரதமகுருவாக இருந்து அலங்காரத் திருவிழாவை நடத்தி வருகிறார்.

# தும்பளை லூர்த்து மாதா திருத்தல வருடாந்த திருவிழா

யாழ். மாவட்டத்தின் கத்தோலிக்க யாத்திரை தலங்களில் ஒன்றான பருத்தித்துறை, தும்பளை, லூர்த்து மாதா திருத்தல வருடாந்த திருவிழா நாளை (02) ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தினசரி நவநாள் வழிபாடுகள் பிற்பகல் 4.30 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமாகி ஆராதனைகள் இடம்பெறும். நற்கருணை விழா எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்

பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு கரன் அடிகளார் தலைமையில் இடம்பெறும் இத் திருத்தலப் பெருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கு முதலாம் திருப்பலியும் காலை 7 மணிக்கு இரண்டாம் திருப்பலியும ஒப்புக் கொடுக்கப்படும் தொடர்ந்து சுற்றுப்பிரகாரத்துடன் வருடாந்த உற்சவம் நிறைவு பெறும்.





# தம்பலகாமம் படுகொலையின் 27 ஆவது ஆண்டு நினைவேந்தல்

**(நிஷா எச்.எம் ஹலால்தீன்)**

தம்பலகாமம் படுகொலையின் 27 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று (01) காலை 7 மணியளவில் தம்பலகாமம் பகுதியில் அமைக்கப்பட்ட நினைவுத்தூபி பகுதியில் உறவினர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களால் அனுஸ்டிக்கப்பட்டது.

இதன்போது படுகொலை செய்யப் பட்டவர்களின் நினைவுத் தூபிக்கு மலர்தூவி விளக்கேற்றி அஞ்சலி செலுத் தப்பட்டது. ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

தம்பலகாமம் பிரதேசத்தின் பாரதிபுரம் கிராமத்தில் 01.02.1998 அன்று இடம்பெற்ற படுகொலை சம்பவத்தில் ஆறுமுகம் சேகர் (வயது 32), அமிர்தலிங்கம் சுரேந்திரன் (வயது 13), அமிர்தலிங்கம் கஜேந்திரன் (வயது 17), பொன்னம்பலம் கனகசபை (வயது 47), முருகேசு ஜனகன் (வயது 18), நாதன் பவளநாதன் (வயது 29), சுப்பிரமணியம் திவாகரன் (வயது 23), குணரத்தினம் சிவராஜன் (வயது 23) உள்ளிட்ட 8 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்தப் படுகொலைகள் தொடர்பாக திருகோணமலை மேல் நீதிமன்றில் வழக்கு முறையிடப்பட்டது. அந்தவகையில் 13 பொலிஸாருக்கு எதிராக முதலில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னர் குறித்த வழக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இங்கு 5 பேர் மீது 37 குற்றச்சாட்டுகள் சுமத் தப்பட்டிருந்தன.

குற்றம் இடம்பெற்று 26 ஆண்டுகளின் பின்னர் 2024 ஏப்ரல் 26 அன்று இவ்வழக்குத் தொடர்பான தீர்ப்பு அநுராதபுரம் வடமத்திய மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி மனோஜ் தல்ஹொடபிட்டியவால் அன்றைய காலப் பகுதியில் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாரதிபுரம் பொலிஸ் பொறுப் பதிகாரியாகப் பணியாற்றிய அதிகாரி, பிரதிப் பொலிஸ் பரிசோதகர், மேலும் 3 பொலிஸார் ஆகியோருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான 27 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று இடம்பெற்றது.

# வடமராட்சி மகளிர் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டிகள்

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி முதல்வர் திருமதி.சத்திய பாமா நவரத்தினம் தலைமையில் நடைபெற வுள்ளது.

போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) மோகனசுந்தரம் தெய்வேந்திரா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.




# இந்திய மத்திய பட்ஜெட் 2025; முக்கிய அறிவிப்புகள் என்ன?

பெரும் எதிர்பார்ப்புகளுக்கு இடையே இந்திய மக்களவையில் இன்று காலை 11.02 மணிக்கு நிதிய மைச்சர் நிர்மலா சீதாராமன் 2025-26 நிதியாண்டுக்கான மத்திய பட் ஜெட்டை தாக்கல் செய்தார்.

தொடர்ந்து 8 ஆவது முறையாக பட்ஜெட்டை தாக்கல் செய்த நிதிய மைச்சர் தனது உரையில் வெளியிட்ட அறிவிப்புகளின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

புதிய வருமான வரி சட்டமூலம் அடுத்த வாரம் தாக்கல் செய்யப்படும். வருமான வரி தாக்கல் செய்யப்படுதல் எளிதாக்கப்படும்.

மூத்த குடிமக்களுக்கு 50,000 ரூபா வரை வரி பிடித்தம் கிடையாது.

தனிநபர் வருமான வரி சீர்திருத் தங்கள் நடுத்தர வர்க்கத்தினர் நலனை சார்ந்ததாக இருக்கும்.

புதிய வருமான வரி முறையின்படி 12 லட்சம் ரூபா வரையிலான ஆண்டு வருமானத்துக்கு வரி செலுத்தத் தேவையில்லை. பழைய வரி விதிப்பு வருமான வரி முறையிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

புற்றுநோய், இன்னும் பிற அரி தான நோய்களுக்கான 36 வகையி லான உயிர் காக்கும் மருந்துகளுக்கு சுங்க வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அதே வேளையில் உயிர்காக்கும் 6 மருந்துகளுக்கு 5 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது.

லித்தியம் பேட்டரிகளுக்கு சுங்கவ ரியில் இருந்து முழுமையான விலக்கு. பின்னலாடைகளுக்கு இறக் குமதி வரியில் சலுகை.

தோல் பொருட்கள் உற்பத்தியை ஊக்குவிக்க தோல் இறக்குமதிக்கு வரிச் சலுகை. ஸ்டார்ட் அப் நிறுவ னங்களுக்கு வரிச் சலுகை நீட்டிக் கப்படுகிறது.

வேளாண் உற்பத்தியை அதிகரிக்க மாநில அரசுகளுடன் இணைந்து புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்.



பருப்பு உற்பத்தியை அதிகரிக்க சிறப்பான சாகுபடியை தரும் விதை கள் வழங்கும் திட்டம் நாடு முழு வதும் செயல்படுத்தப்படும்.

அசாமில் யூரியா உற்பத்தி தொழிற்சாலை அமைக்கப்படும்.

பருத்தி உற்பத்தியை அதிகரிக்க திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

பிஹாரில் மக்கானா (தாமரை விதை) உற்பத்திக் கூடம் அமைக் கப்படும்

கிசான் கடன் அட்டை மூலம் 7.7 கோடி விவசாயிகள் குறுகிய கால கடன்பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

கிசான் கடன் அட்டை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடனின் உச்ச வரம்பு 3 லட்சம் ரூபா யிலிருந்து 5 லட்சம் ரூபா உயர்த்தப் படுகிறது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி யில் தன்னிறைவு பெற 6 ஆண்டு கால சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

பட்டியல், பழங்குடி, பிற்படுத்தப் பட்ட வகுப்புகளைச் சேர்ந்த பெண்க ளுக்கு, புதிதாக தொழில்முனைவோ ருக்கு 2 கோடி ரூபா வரை கடனுதவி வழங்கப்படும்.

காலணி மற்றும் தோல் துறை யைப் பொருத்தவரையில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் 22 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

பொம்மை உற்பத்தித் துறையில் இந்தியாவை அந்தச் சந்தைக்கான சர்வதேச மையமாக்கும் வகையில் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

நாடு முழுவதும் ஐ.ஐ.டி. கல்வி நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். ஐ.ஐ.டி. பாட்னா விரிவுபடுத்தப்படும். இதன் மூலம் கூடுதல் மாணவர் சேர்க்கை உறுதி செய்யப்படும்.

நாடு முழுவதும் மருத்துவக் கல் லூரிகளில் கூடுதல் 10,000 சேர்க்கை இடங்கள் உருவாக்கப்படும்.

ஜல்ஜீவன் திட்டம் 2028 வரை நீட் டிக்கப்படுகிறது.

அடுத்த 10 ஆண்டுகளில் மாநிலங் களில் புதிதாக 100 விமான நிலை யங்கள் உருவாக்கப்படும்.

செயற்கை நுண்ணறிவை கல்வி யில் ஊக்குவிக்கும் வகையில் 500 கோடி ரூபா முதலீட்டில் ஒரு மையம் உருவாக்கப்படும். அடுத்த 5 ஆண்டு களில் 50 ஆயிரம் 'அடல் ஆய்வகங்கள்' அரசுப் பள்ளிகளில் உருவாக்கப்படும்.

5 தேசிய திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்படும்.

காப்பீட்டுத் துறைகளுக்கான அந்நிய நேரடி முதலீட்டுக்கான வரம்பு 100 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.

'இந்தியாவின் குணமாகுங்கள்' ஹீல் இன் இந்தியா பிரச்சாரம் முன் னெடுக்கப்படும்.

பொருள் விநியோகம் செய்யும் டெலிவரி பணியில் உள்ள ஊழியர்க ளுக்கு மின்னணு அடையாள அட்டை வழங்கப்படும்.

அனைத்து மாவட்ட மருத்துவ மனைகளிலும் அடுத்த மூன்றாண்டுக ளில் புற்றுநோயாளிகளைப் பராம ரிக்கும் வகையில் 'டே-கேர் கேன்சர் மையங்கள்' அமைக்கப்படும். இவற் றில் 200 மையங்களில் 2025 - 26 ஆண்டிலேயே அமைக்கப்படும்.

இவ்வாறாக நிதியமைச்சர் பல வேறு முக்கிய அறிவிப்புகளை வெளி யிட்டார்.





# ஹமாஸ் விடுவிக்கும் மூவருக்காக இஸ்ரேல் 183 பலஸ்தீனர்கள் விடுதலை

காஸாவில் நான்காவது சுற்று கைதிகள் பரிமாற்றத்தின் கீழ் இஸ்ரேலிய சிறைச்சாலைகளிலிருந்து 183 கைதிகள் விடுவிக்கப்படவுள்ளதாக பலஸ்தீன கைதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

காஸாவில் இன்று நான்காவது கைதிகள் பரிமாற்றம் செய்யப்படவுள்ளதோடு மூன்று இஸ்ரேலியர்களை இன்று விடுவிக்கவுள்ளனர் என ஹமாஸ் அமைப்பு அடையாளம் கண்டுள்ளது. வெளிநாட்டில் மருத்துவச் சிகிச்சை தேவைப்படும் 50 பலஸ்தீனர்கள் எகிப்துடன் மீண்டும் திறக்கப்பட்ட ரஃபா வழியாக காசாவை விட்டு வெளியேற அனுமதிக்கப்படுவார்கள் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

மேற்குகரைப் பகுதியில் இஸ்ரேலிய படைகள் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து முன்னெடுப்பதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஜெனின், துல்கரேம் ஏதிலி முகாம்கள் உள்ளிட்ட பிற பலஸ்தீன சமூகத்தினரையும் குறி வைத்துக் கடந்த வாரத்தில் இஸ்ரேலிய படையினர் மேற்கொண்ட தாக்குதலில் இருபதுக்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

# மூன்று நாடுகளுக்கான வரி விதிப்பு இன்று முதல் அமுல்: வெள்ளை மாளிகை

கனடா, மெக்சிகோ மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கான வரி விதிப்பு இன்று முதல் அமுலுக்கு வருவதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

கனடா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகள் மீது 25 சதவீதமும், சீனா மீது 10 சதவீதமும் வரி விதிக்கப்படும் என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் சட்டவிரோத வகையில் பெண்டனைல் எனப்படும் மருந்து பொருள் விநியோகிக்கப்பட்டு உள்ளது என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.





இந்த பெண்டனைல் என்ற மருந்து பொருள் வலி நிவாரணியாக மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இதனால், கோடிக்கணக்கான அமெரிக்க மக்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை தொடர்ந்து, இந்த பென்டனைலை விநியோகித்ததற்காக கனடா, மெக்சிகோ மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு வரிகளை விதிப்பது என புதிதாக அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அரசாங்கம் முடிவு செய்தது.

அமெரிக்காவின் இந்த வரி விதிப்பு இன்று முதல் அமுலுக்கு வரும் என வெள்ளை மாளிகையின் ஊடக செயலாளர் கரோலின் லீவிட் தெரிவித்துள்ளார்.


# ஆறு பேருடன் பயணித்த தனியார் விமானம் விபத்து

அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் 6 பேருடன் பயணித்த தனியார் விமானமொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. மோசமான வானிலை காரணமாகக் குறித்த விபத்து ஏற்பட்டிருக்கலாமெனசந்தேகிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் இவ்விபத்தினால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்பட்டுள்ளதா என்பது குறித்து எவ்வித தகவலும் இதுவரை வெளியாகவில்லை.

இந்த விமானத்தில் இரண்டு நோயாளர்கள், இரண்டு மருத்துவர்கள் மற்றும் இரண்டு ஊழியர்கள் இருந்தனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கனடா முரசு

பக்கங்கள் 03

சனிக்கிழமை 01/02/2025


## 4,000 டொலர்களை இழந்த கனடிய தம்பதி

கனடாவைச் சேர்ந்த தம்பதியினர் சிறு தவறு காரணமாக சுமார் நான்காயிரம் டொலர்களை இழக்க நேரிட்டனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மைக் அன்டர்வுட் 03

# தமிழர்களுக்கு எதிரான குற்றங்களை புரிந்தவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த நடவடிக்கை எடுப்பேன்

### *கனடாவின் எதிர்க்கட்சி தலைவர் பியெர் பொய்லிவ் உறுதி*

**அடுத்த தேர்தலில் தான் பிரதமராக தெரிவு செய்யப்பட்டால், தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களை புரிந்த ராஜபக்ஷர்களையும், ஏனைய குற்றவாளிகளையும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு அவசியமான தலைமைத்துவத்தை நான் வழங்குவேன் என கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான கொன்சவேட்டிவ் கட்சியின் தலைவர் பியெர் பொய்லிவ் உறுதியளித்துள்ளார்.**



கனடாவின் டொரன்டோ நகரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே பியெர் பொய்லிவ் மேற்கொண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலையை நிகழ்த்திய இலங்கை அரசாங்கத்தை தனிமைப்படுத்தி தண்டிக்கும் நோக்கில் 2013 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டை கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் புறக்கணித்தமையினை பியெர் பொய்லிவ் நினைவுக் கூர்ந்துள்ளார்.

இந்நிலையில், அடுத்த தேர்தலில் தான் பிரதமராக தெரிவு செய்யப்பட்டால் இலங்கையில் போர் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் தரப்பினரை சர்வதேச நீதிமன்றத்துக்கு கொண்டுச் செல்வதற்கு அவசியமான தலைமைத்துவத்தை வழங்கத் தயாராகவிருப்பதாக பியெர் பொய்லிவ் தெரிவித்துள்ளார்.

கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ருடோ தனது பதவி விலகியதை அடுத்து, கனடா பிரதமர் பதவிக்காக கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான கொன்சவேட்டிவ் கட்சியின் தலைவர் பியெர் பொய்லிவ் போட்டியிடவுள்ளார்.

மேலும் 45 ஆவது கனடிய நாடாளுமன்றத்திற்கு 'ஹவுஸ் ஆஃப் காமன்ஸ்' உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 2025 ஆம் ஆண்டுக்கான கனேடிய கூட்டாட்சித் தேர்தல் அக்டோபர் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கனடாவில் அரசாங்கம் அனுப்பிய காசோலைகளை மாற்றுவதில் சிக்கல்




அரசாங்கம் மக்களுக்கு அனுப்பி வைத்த காசோலைகள் காசோலைகளை பணமாக்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் ஒன்றாரியோ மாகாண அரசாங்கம் 200 டொலர்கள் பெறுமதியான காசோலைகளை மக்களுக்கு வழங்கியிருந்தது. 03



# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்

கனடா முழுவதும் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தேடப்பட்டு வந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆல்பர்ட்டா பொலிஸார் மேற்படி நபரை கைது செய்துள்ளனர். எயார்ட் ரைட் பகுதியில் வைத்து அந்த நபரை கைது செய்ததாக அல்பர்ட்டா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வேகமாக வாகனத்தை செலுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.எனினும் இந்த நபர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணைகளில் இவர் ஒரு தேடப்பட்டு வரும் குற்றவாளி என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரிடம் இருந்து துப்பாக்கி ஒன்றும் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த சந்தேகநபர் பல்வேறு குற்றசெயல்களுடன் தொடர்புடையவர் எனவும் அவர் மீது வழக்கு தொடரப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்ப டுகிறது.

கொலை குற்றச்சாட்டுகளும் இந்த நபர் மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



# கனடா மீது இரண்டு கட்டமாக வரி விதிப்பு: டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் அறிவிப்பு

கனடா மீது அமெரிக்கா விதிக்க இருக்கும் வரிகள் குறித்து ட்ரம்ப் நிர்வாகம் விளக்கமாக விவரித்துள்ளது.

அதாவது, இரண்டு கட்டமாக வரிகள் விதிக்கப்பட இருப்பதாக துறை சார் அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இன்று முதல் கனடா மீது வரிகள் விதிக்க இருப்பதாக ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், கனடா மீது இரண்டு கட்டமாக வரிகள் விதிக்கப்பட இருப்பதாக ட்ரம்ப் தனது வர்த்தகச் செயலராக தேர்ந்தெடுக்க இருக்கும் ஹாவர்ட் லட்னிக் என்பவர் தெரிவித்துள்ளார்.

அதாவது, முதல் கட்டமாக இன்னும் சில நாள்களில் கனடா மீது வரிகள் விதிக்கப்பட உள்ளனவாம்.

அதைத் தொடர்ந்து, இரண்டாவது கட்டமாக, வசந்த காலத்தில் மீண்டும் வரிகள் விதிக்கப்படுமாம்.

கனடாவிலிருந்தும் மெக்சிகோவிலிருந்தும், அமெரிக்காவுக்குள் போதைப் பொருட்களும், சட்டவிரோத புலம்பெயர்ந்தோரும் நுழைவதே இந்த இரண்டு நாடுகள் மீதும் வரி விதிக்கக் காரணம் என ட்ரம்ப் கூறியிருந்தார்.

அதைத் தொடர்ந்து போதைப்பொருள் நடமாட்டத்தையும் சட்டவிரோத புலம்பெயர்ந்தோர் எல்லை தாண்டி அமெரிக்காவுக்குள் நுழைவதையும் தடுக்க கனடா பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துவருகிறது.

அந்த நடவடிக்கைகளால் இன்று முதல் ட்ரம்ப் வரிகள் விதிக் காமல் விட்டால் கூட, இந்த வரிகள் பிரச்சினை இப்போது தீருவதாகத் தெரியவில்லை.

காரணம், அடுத்த வரி விதிப்பு திட்டம், அமெரிக்கா கனடாவுக்கு ஏற்றுமதி செய்யும் ஒவ்வொரு பொருளாக பட்டியலிட்டு, அவற்றை கனடா எப்படி கையாள்கிறது என்று கவனித்து, அதற்கேற்ப வரிகள் விதிப்பதற்காக, ஆவன செய்யுமாறு ட்ரம்ப் தனது அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளாராம்.





# அலையில் அடித்துச் செல்லப்பட்ட பெண்: உண்மை நிலை அறிய தவிக்கும் பெற்றோர்

கனடாவுக்கு கல்வி கற்க சென்ற இந்திய இளம்பெண் ஒருவர் கடற்கரைக்குச் சென்றபோது மாயமானார்.

அவருக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் அவரது பெற்றோர் இந்தியாவில் தவித்துவருகிறார்கள்.

இந்தியாவின் பஞ்சாபிலிருந்து கல்வி கற்பதற்காக 2022ஆம் ஆண்டு கனடா சென்றார் சந்தீப் கௌர் (வயது 22).

வறுமையிலிருக்கும் தன் குடும்பத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவதாக உறுதியளித்துவந்த சந்தீப் கௌர், தான் சொன்னபடியே சுற்றுலாத்துறையில் பட்டயப்படிப்பை முடித்து வேலையிலும் சேர்ந்துள்ளார். நிரந்தரக் குடியிருப்பு அனுமதியும் பெற்றுவிட்டார்.

இந்நிலையில், இம்மாதம், அதாவது, ஜனவரி மாதம் 15ஆம் திகதி, சந்தீப் கௌர் Cape Spear என்னுமிடத்துக்கு அருகிலுள்ள கடற்கரை ஒன்றிற்கு ஆண் நண்பர் ஒருவருடன் சென்றுள்ளார்.

கடற்கரையில், ஆபத்தான பகுதி என அறிவிக்கப்பட்ட ஒரு இடத்துக்கு சந்தீப் கௌரும் அவரது நண்பரும் சென்றுள்ளனர்.

அப்போது, சந்தீப் கௌர் கடலில் தவறி விழுந்துள்ளார் எனவும் , அலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

சந்தீப் கௌரின் நண்பர் அவரை காப்பாற்ற முயன்றுள்ளார் எனவும் அவருக்கும் லேசான காயங்கள் ஏற்பட, மீட்புக்குழுவினர் அவரை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இதுவரை சந்தீப் கௌரின் உடல் கிடைக்கவில்லை. இந்நிலையில், கனடாவில் உண்மையில் தங்கள் மகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் அவரது பெற்றோர் இந்தியாவில் தவித்து வருகிறார்கள்.

காரணம், சந்தீப் கௌர் கடலில் விழுந்துள்ளார் என ததாக கூறப்படுவதற்கு மூன்று மாதங்கள் முன், அவர் தனது சமூக ஊடக கணக்குகள் அனைத்தையும் நீக்கியுள்ளார். சமூக ஊடகம் வாயிலாகத்தான் சந்தீப் கௌர் தன் குடும்பத்துடன் தொடர்பில் இருந்துள்ளார். இதற்கிடையில், சந்தீப் கௌருடன் கடலுக்குச் சென்ற நபரை தொடர்பு கொள்ள கனேடிய ஊடகங்கள் முயன்றுள்ளன.

ஆனால், அவரை தொடர்பு கொள்ள முடியவில்லையாம்.

பரம்பரை நிலத்தை விற்று சந்தீப் கௌரை கனடாவுக்கு அனுப்பிவைத்த அவரது பெற்றோர், மகள் தங்கள் குடும்பத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்து விடுவார் என்னும் நம்பிக்கையில் இருந்த நிலையில், அவர் அலையில் அடித்துச் செல்லப்பட்டதாக கூறப்படுவதைக் கேட்டு என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துப்போயிருக்கிறார்கள்.

## 4,000...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


மற்றும் ஜெசிக்கா ரொபர்ட்சன் ஆகியோர் இவ்வாறு பணத்தை பறிகொடுத்துள்ளனர்.

தங்களது வீட்டை விற்றுவிட்டு புதிய குடியிருப்பொன்றுக்கு செல்ல இருவரும் திட்டமிட்டிருந்தனர்.

தங்களது ஒரு குடியிருப்பினை வாடகைக்கு விடுவதற்கு இந்த தம்பதியினர் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இதன் போது ஒரு சிறு தவறினால் அவர்களது வாடகைத் தொகை வேறும் ஒருவரின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

வாடகைப் பணம் மைக் அன்டர்வுட் என்ற பெயரினை உடைய மற்றுமொரு




நபரின் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

தட்டச்சி செய்த போது ஏற்பட்ட எழுத்துப் பிழையினால் இவ்வாறு பணத்தை இழக்க நேரிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தபால் மூலமாக இந்த காசோலைகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. இந்த காசோலைகளை சில வங்கிகளில் பணமாக்க முடியவில்லை என முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக ஆர்.பி.சி மற்றும் ரீ.டி ஆகிய வங்கி வாடிக்கையாளர்களுக்கு தங்களது காசோலைகளை பணமாக்கிக் கொள்ள முடியவில்லை என தெரிவிக்கப்படுகிறது. இந்த பிரச் சினை தீர்க்கப்பட்டு விட்டதாக குறித்த வங்கிகள் அறிவித்துள்ளன.

வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்ட அசௌகரிங்களுக்காக வருந்துவதாக அந்த வங்கிகள் தெரிவித்துள்ளன.

பணவீக்கம், வட்டி வீத பிரச்சனை போன்ற ஏதுக்களை கரத்தில் கொண்டு மாகாண அரசாங்கம் இவ்வாறு 200 டொலர் உதவு தொகை ஒன்றை அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக மாகாண அரசாங்கத்திற்கு வரி செலுத்துவோருக்கு இந்த உதவுதொகை வழங்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.